1982 ஏப்ரல் 3]

(அ) கடலூர் அரசினர் மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி தனியாக திறக்கப்பட்டு நோயாளிகள் தங்கி சிகிச்சைப்பெற வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கடலூர் அரசினர் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு பத்து படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. அதற்குத் தனியாகக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 746— திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவு ஒன்று ஏற்படுத்த திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பொன்று துறைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சாதாரண மருத்துவ மனை மட்டுமல்ல. அது மருத்துவக்கல்லூரி என்ற வகையிலே மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கக்கூடிய ஒரு இடம். அப்படி அந்த மருத்துவமனை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக ஆனதிலிருந்து புற்றுநோய்ப் பிரிவே இல்லாமல் இருப்பது அந்த மாணவர்களுடைய பயிற்சிக்குக் கூட இடையூறாக இருக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதுவரை அப்படி புற்றுநோய்ப்பிரிவு ஏற்படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? மற்ற இடங்களுக்குப் ப்ரையாரிட்டி கொடுத்து இந்த இடத்திற்கு அதனால் கொடுக்காமல் இருப்பது தான் காரணமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இது மட்டுமல்லாமல் இன்னும் இரண்டு மூன்று கல்லூரிகளில் அப்படி இல்லாத நிலைமை இருக்கின்றது. மேலும் இது இல்லை என்றால் மாணவர்களின் படிப்பிற்கு எந்த விதமான

பாதிப்பும் ஏற்படாது. இது போஸ்ட் கிரேஜுவேட் ட்ரெய்னிங் -க்கு தான் தேவைப்படுகின்றது. ஆகவே எம்.பி.பி.எஸ் மாணவர்களின் படிப்பு இதனால் பாதிக்கப்படாது. இருந்தாலும் கூட ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம். எந்தெந்தக் கல்லூரிகளில் ஸ்பெஷல் கருவிகள் இருக்கின்றனவோ அந்தக் கல்லூரிகளுக்கு, எந்தக் கல்லூரிகளில் அக்கருவிகள் இல்லையோ அக்கல்லூரியின் மாணவர்கள் வந்து அங்கே பார்ப்பதற்கும் அதன்படி 15 நாட்கள் அங்கே பயிற்சி கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். ஆனால் எல்லாக் கல்லூரிகளிலும் அப்படி கருவிகளை எல்லாம் கொண்டு வர வேண்டும் என்றால் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். அந்த அளவுக்கு நம்மால் செலவழிக்க முடியுமா என்பதை பார்க்க வேண்டும். அண்மையில் மத்திய அரசு கூட ஒரு கைட்லைன்ஸ் கொடுத்திருக்கின்றது. பிரைம் மினிஸ்டர் அவர்கள் ஒருகைட் லைன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் எல்லாப் பிரிவுகளும் இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. அவற்றை ஸ்டேகர் செய்து ஒரு இடத்தில் சில பிரிவுகளுக்கான கருவிகள், இன்னொரு இடத்திலே இன்னொரு பிரிவுகளுக்கான கருவிகள் என்று வைத்து எக்ஸேஞ்ச் ஆஃப் நாலெட்ஜ் என்ற வகையிலே செய்துகொள்ளலாம் என்று கூட யோசனை சொல்லி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் எல்லாவற்றிலும் இந்த மாதிரியான கருவிகள் இருக்கவேண்டிய தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது கொஞ்சம் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம். கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பதற்கு அதற்குப் பக்கத்திலே உள்ள மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் கூட வந்து படிக்கக்கூடிய ஒரு பெரிய சென்டர். சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகியவற்றைப் போல் கோவையும் ஒரு பெரிய பிரிவாகும். அப்படிப்பட்ட ஒரு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலே புற்றுநோய்ப்பிரிவு ஏற்படுத்தவில்லை. என்றால் அந்த மாணவர்கள் சென்னைக்கோ அல்லது மதுரைக்கோ, தஞ்சைக்கோ தான் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். தனியார் மருத்துவமனைகளில அவர்களைக் கொண்டுபோய் நிறுத்தி அவர்களைப் பயிலச்செய்யக்கூடாது. அது அரசின் நிலைக்கே கெடுதலாகும். இந்த நிலலயிலே அங்கே புற்றுநோய்ப் பிரிவு ஏற்படுத்தப்படாமல் இருப்பதை உடனடியாகக் கவனித்து இந்த வருஷமே நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து முன்வந்து நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்று கருதுகிறேன். தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அது இப்போது இயலாத காரியம். நம்முடைய நிதிநிலைமையைப் பார்த்தால் இயலாது. எனவே நான் உடனடியாகச் செய்ய இயலாது என்று சொன்னேன்

1982 ஏப்ரல் 3]

	1980.	1981.	Up to March 1982
Total number of patients treated for cancer.	1650	1750	582

டீப் எக்ஸ்ரே யூனிட்ஸ், ரேடியம் நீடில்ஸ் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் கான்ஸர் இலாகா என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்தஸ்து இல்லை என்றுதான் அர்த்தம். திரு. ரமணி அவர்கள் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டிருக் கிறார்கள். உடனடியாக அதைக் கொண்டு வர ஏதாவது உத்தேசமுண்டா என்று.

அந்தக் குறிப்பை மட்டும் நான் படித்துவிடுகிறேன்:

The Director of Medical Education has also stated that according to the specifications of the radium protection division of the Bombay Atomic Research Station, Bombay, plans and estimates were called for from the Public Works Department. Model plans were received from the Chief Architect, Public Works Department for construction of new ward and buildings to start a Cobalt unit as well as cancer ward in Coimbatore Medical College Hospital.

The Director of Medical Education has stated that steps have been taken to get the permission from the Baba Atomic Research Centre to approve the site and plan and further action will be taken on receipt of approval.

இது ஓரளவு திரு. ரமணி அவர்களுக்கு ஆறுதல் தரக்கூடிய செய்தியாகும். இதை ஆரம்பிக்கவேண்டுமென்றால் பாபா அட்டமிக் ரிசர்ச் சென்டர் வந்து பார்த்து க்ளியரன்ஸ் கொடுத்தால்தான் செய்யமுடியும். அதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

போக்குவரத்துக் கழகங்களுடன் பொறியியல் கழகங்களை இணைக்கும் திட்டம்.

*வினா எண்.747—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்கு வரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழக அரசு அனைத்து போக்குவரத்துக் கழகங்களுடன் தமிழக அரசு பொறியியல் கழகங்களை இணைக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பொறியல் கழகங்களை போக்கு வரத்துக் கழகங்களுடன் இணைப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும்? இதனால் அங்கே பணி புரியும் ஊழியர்களுக்கு பலன் உண்டா?